
# நீயும் உன் வீட்டாரும்

## 3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# நான் வயல்வெளியில் என்னுடைய தகப்பனாருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 55-0117 — எவ்விதமாக தூதன் என்னிடத்திற்கு வந்தார் என்பதும், அவருடைய கட்டளையும்

37. ஓர் நாள் இரவு நான் நம்முடைய கர்த்தராகிய இயேசுவைக் கண்டேன்.

நான் பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து பெற்ற அனுமதியோடே இதை கூறிக்கொண்டிருக்கிறேன் என்று நான் நம்புகிறேன்.

கர்த்தருடைய தூதனாக வருகிறவர் கர்த்தராகிய இயேசுவல்ல. அதே தரிசனத்தில். அது அவரைப் போன்று காணப்படவில்லை.

ஏனென்றால், கர்த்தராகிய இயேசுவை நான் காண்கின்ற தரிசனத்தில், அவர் ஒரு சிறிய மனிதராக இருந்தார்.

**நான் வயல்வெளியில் என்னுடைய தகப்பனாருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன்.**

அதன் பின்னர் நான் உள்ளே வந்து என்னுடைய படுக்கைக்குச் சென்றேன்.

**அன்றிரவு நான் அவரை நோக்கிப் பார்த்து, "ஓ தேவனே அவரை இரட்சியுமே !" என்றேன்.**

38. **என்னுடைய தாயார் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டிருந்தாள்.**

**நான் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருந்தேன்.**

**அதன் பின்னர் நான், “என்னுடைய தகப்பனார் அதிகமாய் குடிக்கிறாரே” என்று நினைத்தேன்.**

**அப்பொழுது நான், “என்னால் மட்டும் அவரை இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள் ளும்படி செய்யக் கூடுமானால் நலமாயிருக் குமே” என்று எண்ணினேன்.**

பின்னர் நான் வெளியே சென்று, என்னுடைய அறைக்கு முன்பாக இருந்த கதவுக்கு அருகில் இருந்த ஒரு சிறு பழைய வைக்கோல் படுகையில் (Pallet) படுத்துக் கொண்டேன்.

39. அப்பொழுது ஏதோ ஒன்று என் னிடத்தில் “எழுந்திரு” என்றது.

உடனே நான் எழும்பி நடக்கலானேன். பின்னர், மீண்டுமாக எனக்கு பின்னாக இருக்கின்ற வயல் வெளியில் உள்ள ஒரு பழைய துடைப்ப புதர் வயலுக்குச் சென்றேன்.

40. அங்கே என்னிடத்திலிருந்து பத்து அடி தூரத்திற்கு அப்பால் ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தார்.

அவர் வெண்மையான வஸ்திரம் தரித்த ஒரு சிறு உருவங்கொண்ட மனித னாயிருந்தார்.

அவர் இந்த விதமாக தன்னுடைய கரங்களை மடக்கி வைத்துக்கொண்டிருக்க, ஒருவிதமான குட்டையான தாடியுடன், தோள் வரை தலைமுடி தொங்கிக் கொண் டிருந்தது.

அவர் என்னிடத்திலிருந்து பக்கவாட்டில் இந்த விதமாக பார்த்துக் கொண்டிருந்தார்.

மிகவும் அமைதியாக காணப்பட்ட ஒரு உருவம்.

ஆனால் என்னால் அதை புரிந்து கொள்ள முடியவில்லை.

அவருடைய பாதங்கள் எப்படி இருந்ததென்றால் ஒன்றன்பின் ஒன்றாக இருந்தது.

அப்பொழுது காற்றும் அடித்துக் கொண்டிருந்தபடியால், அவருடைய அங்கி துடைப்பப்புல்லோடு அசைந்து கொண்டிருந்தது.

41. நான், “இப்பொழுது ஒரு நிமிடம் பொறுத்துப் பார்க்கலாம்” என்று எண்ணி னேன்.

பின்னர் நான் என்னையே கடித்துப் பார்த்தேன்.

அதன்பின்பு நான், “இப்பொழுது நான் உறங்கவில்லையே” என்று சொல்லிக் கொண்டேன்.

அப்பொழுது நான் ஒரு துடைப்பப் புல்லைப் பிடித்து இழுத்து, அதில் ஒரு சிறு துண்டை ஒரு பல்குத்தியைப் போன்று செய்து கொண்டேன். பின்னர் அதை என் னுடைய வாயில் போட்டுக்கொண்டேன்.

அப்பொழுது நான் திரும்பி என்னுடைய வீட்டை நோக்கியே பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான், “இல்லை, நான் அங்கே உள்ள தகப்பனாருக்காகத்தானே ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஏதோ ஒன்று என்னிடத்தில் இங்கே வெளியே வா என்று கூற, இங்கே இந்த மனிதன் நிற்கிறாரே!” என்றே எண்ணினேன்.

42. அப்பொழுது நான், “அது கர்த்தராகிய இயேசுவைப் போன்று இருக்கிறதே” என்று நினைத்தேன்.

நான், “அது அவராகத்தான் இருக்குமோ” என்றும் வியந்தேன்.

அவர் சரியாக நேராக இப்பொழுது எங்களுடைய வீடு இருக்கிற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

எனவே என்னால் அவரைப் பார்க்க முடியுமா என்று எண்ணி இந்த வழியாக நான் நகர்ந்து சென்றேன்.

இந்த விதமாக அவருடைய முகத்தைப் பக்கவாட்டில் என்னால் பார்க்க முடிந்தது. ஆனால் அவர் ...

அவரை பார்ப்பதற்காக நான் இந்த விதமாய் அப்படியே சுற்றி வரவேண்டிய தாயிருந்தது.

நான், “ஹூம்!” என்றேன். அது அவரை அசைக்கவேயில்லை.

பின்னர் நான், “அவரை கூப்பிட்டுப் பார்க்கலாமே” என்று நினைத்தேன்.

அப்பொழுது நான், “இயேசுவே” என்றேன்.

அவர் அதை கேட்டபோது, இந்த விதமாக திரும்பி நோக்கிப் பார்த்தார். எனக்கு அவ்வளவுதான் நினைவிருக்கிறது.

அப்பொழுது அவர் அப்படியே தன்னுடைய கரங்களை நான் பிடிக்கும்படி நீட்டினார்.

43. அவருடைய படத்தை வரைய இந்த உலகில் எந்த ஒரு ஓவியனும் இல்லை.

அதாவது அவருடைய முகபாவத்தை ஒருவராலும் வரையமுடியாது.

நான் எப்போதும் கண்டதிலேயே மிகவும் சிறந்ததாயிருப்பது எதுவென்றால் ஹாப்மேன் (Hofmann) என்பவர் வரைந்த முப்பத்தி மூன்று வயதில் கிறிஸ்துவி னுடைய தலை என்ற புகைப்படமேயாகும்.

நான் அதை எல்லா புத்தகங்களிலும், நான் உபயோகிக்கின்ற ஒவ்வொரு புத்த கத்திலும் அதை வைத்திருக்கிறேன்.

அதற்குக் காரணம் என்னவென்றால் அது சரியாக அந்த விதமாக இருப்பது போலுள்ளது அல்லது சற்றே குறைய அப்படியே உள்ளது.

44. அவர் (ஒரு மனிதனை) போன்று காணப்பட்டார். அவர் பேசுவாரானால் உலகமே ஒரு முடிவுக்கு வந்துவிடும் போலிருந்தது.

அதே சமயத்தில் அவர் அவ்வளவு அன்பும் தயவும் கொண்டவராயிருந்தார்...

நான் தலைக்குப்புற விழுந்தேன். பொழுது விடிந்ததும் எனக்கு நினைவு வந்து விடியற்காலையில் நான் என்னைப் பார்க்கும்போது என்னுடைய இரவு உடுப் பான தளர் கால்சட்டையானது (Pyjama) கண்ணீரினால் அப்படியே தோய்ந் திருந்தது.

அப்படியே நான் துடைப்ப புதரினூ டாக வீட்டிற்கு திரும்பி நடந்து சென்றேன்.



# நீ உண்மையில் உப்புத்தன்மை கொண்டவளாயிரு; அவருக்குள் ஏதாகிலும் இருக்குமானால், அவர் தாகமடைவார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #19

Q.245. **சகோ.பிரன்ஹாமே, இந்நாளுக் கான தேவனுடைய செய்தியை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன், எங்கள் மகனும் கூட. நாங்கள் இருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். என் கணவர் செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை, அவர் இந்த செய் தியை எதிர்த்துப் போராடுகிறார். எங்கள் மகனை அவர் வசீகரித்து அவனை மெதோ டிஸ்டு சபைக்குக் கொண்டு செல்கிறார். நமது கூடாரத்தில் ஆராதனை இல்லாத போது அவருடன் நான் அந்த சபைக்குச் செல்ல வேண்டும் என்கிறார். அவருடன் நான் செல்வது சரியா, அல்லது அந்த**

**ஸ்தாபனத்திலிருந்து விலகியிருத்தல் நலமா யிருக்குமா?**

138. நல்லது. இப்பொழுது, அருமை சகோதரியே... அவள் கையொப்பமிட வில்லை, ஒருக்கால் உன் கேள்விக்கான பதிலை நீ கேட்டுக் கொண்டிருக்கலாம்; இல்லையென்றால் நீ அதை ஒலிநாடாவில் கேட்பாய்.

உன் கணவருடன் போ, ஆனால் அவர் கள் செய்வதில் நீ பங்கு கொள்ளாதே.

**பார், உன் கணவரை நீ நேசிக்க வேண்டியவளாயிருக்கிறாய், அன்பு தான் அதைச் செய்கிறது.**

**நீ உண்மையில் உப்புத்தன்மை கொண் டவளாயிரு; அவருக்குள் ஏதாகிலும் இருக்கு மானால், அவர் தாகமடைவார்.**

139. அவர்களுடைய ஸ்தாபனத்தைச் சேராதே.

“அந்த ஸ்தாபனத்திலிருந்து விலகி யிருக்கலாமா" என்று நீ கேட்டிருக்கிறாய், அதை சேராதே; அங்கு போ.

உனக்கு முழு ரொட்டி கிடைக்க வில்லையென்றால், பாதி ரொட்டியைப் பெற்றுக் கொள்; பாதி ரொட்டி கிடைக்க வில்லையென்றால், ஒரு 'ஸ்லைஸ்' ரொட்டி பெற்றுக் கொள்.

பார், பார்? அவ்விதம் செய்வதன் மூலமாகவே உன் கணவரை நீ வெல்ல முடியும்.

**கர்வமாக இராதே. அப்பொழுது உன்னைப் போலவே அவருக்கும் கர்வம் உள்ளதென்று அவர் காண்பிப்பார். பார்?**

**ஆனால் அவருக்கு இல்லாதது ஒன்று உனக்கு உள்ளதாக! நீ காண்பிக்க முடியு மானால், உன்னைப் போல் இருப்பதற்காக அது அவரைத் தாகமடையச் செய்யும்.**

**புருஷன் பரிசுத்தமாக்கப்பட்ட தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்** (1 கொரி. 7:14).

140. இது ஒரு புத்திமதி மட்டுமே. இதன் பேரில் என்னால் நீண்ட நேரம் பேச முடியும், ஆனால் எத்தனை கேள்வி களுக்கு நம்மால் பதிலளிக்க முடியுமோ, அத்தனைக்கும் பதிலளிக்க விரும்பு கிறோம். எனக்கு இன்னும் இருபத்திரண்டு நிமிடங்கள் மட்டுமே உள்ளதாகக் காண் கிறேன். சரி.



அவர்கள் இந்த காரியங்களை அங்கு
போதிப்பார்களானால்... உனக்கு அதைக்
காட்டிலும் மேலான காரியங்கள்
போதிக்கப்பட்டுள்ளது; நீ உப்புத்தன்மை
கொண்டவளாய் இருப்பாய்; அவர்
உன்னைக் கண்டு கர்த்தரிடத்தில் வருவார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

Q.344. **என் கணவருக்கும் எனக்கும் வேதத்தின் பேரில் கருத்து ஒருமைப்பாடு இல்லை உதாரணமாக நீங்கள் பிரசங்கிக்கும் இந்த சத்தியத்தின் பேரில் அவருக்குப் புரிய வில்லை. நான் விசுவாசிக்காத போதகங் களைக் கொண்டிருக்கும் சபைகளுக்கு நான் அவருடன் செல்ல வேண்டுமா? இதைக் குறித்து நான் அதிகம் கலக்கமடைந்துள் ளேன்.**

190. ஆம்! இந்த கணவனுக்கு நீ மனைவியாயிருப்பாயானால். அவர் உன் னைக் குற்றப்படுத்தவில்லை, நீ அவரைக்

குற்றப்படுத்தக் கூடாது (பார்?), ஏனெனில், புருஷன் மனைவியினால் பரிசுத்தமாக்கப் படுகிறான். பார்? நான் நினைக்கிறேன், அவர் ஏதாகிலும் ஒரு ஸ்தாபன சபைக்குச் சென்று, நீ அவருடன் செல்ல வேண்டு மென்று அவர் விரும்பினால். பார்? நீ வேண்டாமென்று...

பார், அங்குள்ள எதுவும் உனக்கு கேடுண்டாக்காது, ஏனெனில் அவர்கள் போதிக்கிறதற்கு நீ எப்படியும் செவி கொடுக்கப் போவதில்லை, ஏனெனில் அவர்களுடைய போதகத்தை நீ விசு வாசிப்பதில்லை என்று நீ இங்கு கூறி யிருக்கிறாய். பார்? எனவே அது உனக்கு கெடுதி விளைவிக்காது, ஆனால் நீ உன் கணவருக்கு மரியாதை செலுத்துகிறாய்.

அவருக்கு உன்னை ஒப்புக்கொடுக்கிறாய், ஒருக்கால் அவ்விதம் செய்வதனால் நீ...

அவர்கள் இந்த காரியங்களை அங்கு போதிப்பார்களானால்... உனக்கு அதைக் காட்டிலும் மேலான காரியங்கள் போதிக் கப்பட்டுள்ளது; நீ உப்புத்தன்மை கொண் டவளாய் இருப்பாய்; அவர் உன்னைக் கண்டு கர்த்தரிடத்தில் வருவார்.

நான் மற்ற கேள்விகளுக்கு செல்கி றேன். என்னே இது. இப்பொழுது மணி என்னவென்று பாருங்கள்?

**அவர்களை நான் கர்த்தரிடத்தில் ஒப்புவித்து விடுவேன். நான்... பாருங்கள், ஏனெனில் “பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்” பாருங்கள்?**



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து**

## செய்தி: 64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #19

Q.246. **சகோ. பிரன்ஹாமே, நீர் போதிக்கும் செய்தியை என் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன். அது என் ஆத்துமாவை சிலிர்க்க வைக்கிறது; எனினும், என் மனைவியும் மகனும் வார்த்தையில் களிகூருவதில்லை. அவர்களுடைய உலகப்பிரகாரமான பழக்கங்களிலிருந்து தங்களைப் பிரித்துக் கொள்ள அவர்களுக்கு மனமில்லை. நமது குடும்பங்களை நாம் உரிமை கோரி தேவனிடம் கேட்க வேண்டுமென்று நீர் கூறினீர். அவர்கள் வார்த்தைக்காக அல்லது வார்த்தையில் வாழாமலிருப்பதைக் காணும் போது, அதை செய்வது எனக்கு கடின**

**மாயுள்ளது. நான் கடைபிடிக்க வேண்டிய வழி எது, ஐயா? அவர்களை நான் உரிமைகோரி விசுவாசிப்பதா, அல்லது "பிதாவே, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று ஜெபித்து, இப்பொழுது நான் இருக்கும் இந்த நிலையில் திருப்தியடைவதா? உம்முடைய புத்திமதியை நான் பாராட்டுவேன், சகோ. பிரன்ஹாமே.**

141. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரனே அல்லது சகோதரியே, நீங்கள் யாராயிருந்தாலும். அவர்களை நான் கர்த்தரிடத்தில் ஒப்புவித்து விடுவேன். நான்... பாருங்கள், ஏனெனில் "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்" பாருங்கள்? ஜனங்களாகிய நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம்.

142. அந்த தங்கும் விடுதி (motel) ஆட்களை நான் சென்று சந்தித்த போது, அது என் இருதயம் மகிழ்ச்சியினால் பொங்கும்படி செய்தது. நான் திரு. பெக் கரிடம் சென்றிருந்தேன். அவர், "பில்லி, உங்களுக்குத் தெரியுமா? ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் உங்கள் சபையோர் அனைவருக்கும் நான் உணவளிக்கிறேன்" என்றார் - 'ப்ளூ போர்' (Blue Boar) என்னும் அந்த உணவு விடுதி ஒவ்வொரு ஞாயி றன்றும் ஏறக்குறைய முன்னூறு பேர் களுக்கு உணவு அளிக்கிறது. பாருங்கள்? நான் இங்கு சென்றிருந்தேன், இங்குள்ள அந்த ஆள், 'ரான்ச் ஹவுஸ்ஸில் உள்ள நற்பண்பு கொண்ட அவர், மிகவும் அருமையானவர்.

நான் அவரைச் சந்தித்தேன்; நான், "நல்லது. அது உண்மையில் மிகவும்

நல்லது. நீங்கள் அந்த ஆபாசமான காரியங்களையும், மற்ற காரியங்களையும் விலக்கியிருப்பதைக் குறித்து உங்களைப் பாராட்டுகிறேன்" என்றேன்.

அவர், "ஆம், ஐயா, சகோ. பிரன் ஹாமே" என்றார்.

நான், "அவருக்கு என்னை எப்படித் தெரியும்?" என்று நினைத்தேன். பாருங் கள்? நான் அவரிடம், "என்னை உங்க ளுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட் டேன்.

அவர், "உங்களை எனக்குத் தெரியும். உங்கள் சபையோர் அனைவருக்கும் நான் ஒவ்வொரு ஞாயிறன்றும் உணவு தருகி றேன். உங்களிடம் ஒன்றைக் கூற விரும்பு

கிறேன்: அவர்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் அருமையானவர்கள்" என்றார்.

143. பாருங்கள், அது எனக்கு நல்லுணர்வை அளித்தது. நீங்கள் என் பிள்ளைகள். பாருங்கள்? என் பிள்ளைகள் மிகவும்நல்லவர்களாக உள்ளனர் என்றும், அவர்கள் மிகவும் நல்ல விதமாக நடந்து கொள்கின்றனர் என்றும் நான் கேட்கும் போது, அது அப்பாவுக்கு மிகுந்த நல் லுணர்வைத் தருகிறது. பாருங்கள்? எனவே நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

144. இப்பொழுது, இப்பொழுது, அம்மா... என் சகோதரியே, உன் கணவர் உன்னை மெதோடிஸ்டு சபைக்கு அவ ருடன் கூட செல்ல அழைப்பாரானால், நீ போ. உனக்கு ஒருக்கால் முழு ரொட்டியும் கிடைக்காது, ஆனால் அவர்கள் இயேசு

கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதாக கூறினால், அதை விசுவாசி, ஏனெனில் நாமும் கூட அதை விசுவாசிக்கிறோம். அவர்கள் வழி விலகி வேறு காரியங்களுக்குச் செல்வார்களா னால், அவர்கள் போகட்டும். ஆனால் நீ அவ்வளவு ரொட்டியை மாத்திரம் சாப்பிடு. பார்? அதன் மூலம் உன் வாழ்வின் இனிமையையும் மற்றவர்கள் பேரில் நீ கொண்டுள்ள அக்கறையையும் காண்பிக் கிறாய். இந்த நற்பண்புகள் உனக்கு இல் லாமல் போனால், அருமை சகோதரியே, அது உனக்குக் கிடைக்கும் வரைக்கும் ஜெபித்துக் கொண்டிரு. நீ ஒன்றையும் செயற்கையாக பாவனை செய்து கொள்ள வேண்டாம். ஏனெனில் நீ அவ்விதம் செய்யும் போது, அது உண்மையான ஒன்றாக இருக்காது. உன் கணவரால் அதை

கண்டு பிடித்து விட முடியும். நீ உண்மையில் ஜெபித்து உன் வாழ்க்கை இரட்சகரின் உப்பினால் நிறைந்திருக்கும் நிலையை அடையும் போது, அது தொடர்பை உண்டாக்கும். "நான் உயர்த் தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்" (யோவான் 12:32), நான் போவேன்; ஆனால் மிகவும் ஜாக்கிரதையாயிரு. அவர்களுடைய சபையை சேர்ந்து விடாதே! தயவு செய்து அதை மட்டும் செய்து விடாதே; அவர்களுடைய சபையை சேர்ந்து விடாதே, ஆனால் அங்கு போ!



உங்களிடத்தில் ஒரு இரட்சிக்கப்படாத பிள்ளை இருந்தால் அந்த அடையாளத்தை அந்தப் பிள்ளையின் மேல் கை வைத்து, தேவனாகிய கர்த்தாவே நான் அவனை உரிமை கோருகிறேன் என்று கூறுங்கள். அங்கேயே தரித்திருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-03-08 அடையாளம்

நான் கூறியது போன்று இப்பொழுது நமக்குத்தானே நாம் விசுவாசித்து, நம் முடைய முழு குடும்பத்துக்கும் அதைப் பிரயோகிக்க வேண்டும்.

எகிப்தில் இருந்தது போன்று அல்லது அப்போஸ்தலர் 16:31 போன்று நீ விசுவாசி.

அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று ரோமர் நூற்றுக்கு அதிபதியிடம் பவுல் கூறினான் என்று நாம் கண்டறிந்தோம்.

அதை உன்னுடைய குடும்பத்துக்கு பிரயோகபடுத்து.

**உங்களிடத்தில் ஒரு இரட்சிக்கப்படாத பிள்ளை இருந்தால் அந்த அடையாளத்தை அந்தப் பிள்ளையின் மேல் கை வைத்து, தேவனாகிய கர்த்தாவே நான் அவனை உரிமை கோருகிறேன் என்று கூறுங்கள். அங்கேயே தரித்திருங்கள்.**

**நீங்கள் ஒரு தாயையோ அல்லது நேசிக் கின்ற இழக்கப்பட்ட ஒருவன் இருந்தால் அந்த அடையாளத்தை அவன் மேல் வைத்து, தேவனாகிய கர்த்தாவே நான் அதை உரிமை கோருகிறேன் என்று கூறுங்கள்.**

136. உலகப்பிரகாரமான எல்லா குப்பைகளும் வெளியே தள்ளுங்கள். உங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற் றுங்கள். அதற்காக ஆயத்தப் படுங்கள். உங்கள் அரைக்கால் சட்டைகளை கொளுத்தி போடுங்கள். சீட்டுக் கட்டுகளை தூக்கி எறியுங்கள். உங்களுடைய சிகரெட்

டுகளை ஒழித்து கட்டுங்கள். அவிசுவாசத்தையும், உங்களுடைய சபை காகிதங்களையும் குப்பை தொட்டியில் போடுங்கள். அது சேர வேண்டிய இடம் அதுதான். ஆமென். அப்பொழுது நீங்கள் ஆயத்த படுகிறீர்கள். அதற்குப் பிறகு என்னச் செய்வது, பின்னர் உண்மையான அத்தாட்சியோடு, உண்மையான விசுவாசத்தோடு, ஜெபத்தில் அந்த அடையாளத்தை பிரயோகப்படுத்துங்கள். அதை பிரயோகபடுத்துங்கள். உறுதியோடு அதை பிரயோக படுத்துங்கள். நீங்கள் அடையாளத்தை பிரயோகிக்கும் போது நீங்கள் சுத்தப் படுத்தி இருக்கிறீர்கள் என்பதை அறிந்திடுங்கள். நம்முடைய இருதயங்கள் நம்மை குற்றவாளி என்று தீர்க்காதிருந்தால் அப்பொழுது நாம் வேண்டிக் கொள்ளுகிறதை பெற்றுக் கொள்கிறோம்.

எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும்போது, எல்லா விசுவாசிகளின் குடும்பத்தினரும், மனைவியும், பிள்ளைகளும் அதில் போவார்களா? அவர்கள் இயேசு கிறிஸ்துவை கர்த்தராக விசுவாசித்து அவரை நம்புகிறார்கள்?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-08-08 உன் வீட்டார்

75. சரி, ஜிம்மி, என் மகனே, உன்னிடம் அவைகள் கிடைத்து விட்டதா? (சகோதரன் ஒரு கேள்வியை வாசிக்கிறார்: ‘**எடுத்துக் கொள்ளப்படுதல் நடக்கும்போது, எல்லா விசுவாசிகளின் குடும்பத்தினரும், மனைவியும், பிள்ளைகளும் அதில் போவார்களா? அவர்கள் இயேசு கிறிஸ்துவை கர்த்தராக விசுவாசித்து அவரை நம்புகிறார்கள்?**’ - - ஆசிரியர்.) ஆமாம், ஆமாம். எடுத்துக் கொள்ளப்படுதலில் குடும்பத்தினர் அனைவரும் போவார்களா? பாருங்கள், ஆமாம். புரிகிறதா? இப்பொழுது, நீங்கள் கவனிப்பீர்களானால், எடுத்துக் கொள்ளப்படுதல் உலகம் முழுவதும் நடக்கிற ஒரு காரியமாக இருக்கப் போகிறது. எப்படியாக...

நீங்கள் எல்லாரும் ஞாயிற்றுக் கிழமை பேசின அந்தப் பாடத்தை சரியாகப் புரிந்து கொண்டீர்களா? நாம் அந்த நேரத்திற்கு, ‘தானியேலின் எழுபது வாரங் களுக்கு’ ஏறக்குறைய எவ்வளவு அருகாமையில் இருக்கிறோம் என்பதை நீங்கள் எல்லாரும் சரியாகப் புரிந்து கொண்டீர்களா?

நீங்கள் எல்லாரும் அங்கே ஞாயிற்றுக் கிழமையில் இருந்தீர்கள், இல்லையா? ஆமாம். சரி. நல்லது. சகோதரன் வெல்ச் அவர்களே, உம்மிடம் அந்த ஒலிநாடா இருந்தது என்று நினைக்கிறேன். உங்களில் சிலர் அதை போட்டுக் (கேட்கலாம்).

அதைக் குறித்த வரைபடம் உங்களிடம் இருந்தது என்று நம்புகிறேன், இல்லையா? ஒருக்கால் அது இல்லாமல் இங்கேயிருப் பவர்களுக்கு அதை அப்படியே வரைந்து

கொடுத்து, அதை அவர்களுக்கு விளக்கிக் கூறலாம் (நீங்கள் பாருங்கள்?), எனவே அவர்கள்-அவர்கள் அதைப் புரிந்து கொள்ள முடியும். வேதவாக்கியத்தின் மூலமாக நீங்கள் அதைக் காண வேண்டு மென்று நான் விரும்புகிறேன், அதில் கூறுவதற்கு என்னிடம் ஒரு வார்த்தையும் கிடையாது. நாம்-நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை வேதவாக்கியங் களே நிரூபிக்கிறது.

76. இப்பொழுது, சகோதரர்களாகிய நாங்கள் இன்று பேசிக் கொண்டிருந்தோம். நீங்கள், 'நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, எடுத்துக்கொள்ளப்படுதல் அவ்வளவு சமீப மாய் இருக்கிறது என்று நீர் விசுவாசிப் பீரென்றால், நீர் ஏன் மீன்பிடிக்கப் போகி றீர்?' என்று கேட்கலாம். நான் அதில் என் சிந்தையை எப்போதுமே வைப்பேனென்

றால், அது பெரும்பாலும் உங்களை காட்டுக்கு விரைந்தோடச் செய்யும். கிறிஸ்துவை அறியாத பத்தாயிரக்கணக் கான ஜனங்கள் இங்கே வெளியே பாவத்தில் இருப்பதைக் குறித்து எண்ணிப் பார்க்கும் போது, ‘நானோ இங்கே இருக்கிறேனே, என்னால் என்ன செய்ய முடியும்?’ என்று நினைக்கிறேன்.

ஆனால் நான் இதோ அதைத் தான் எண்ணிப் பார்க்கிறேன். தேவன் அவர் களை அழைத்தாலொழிய என்னால் ஒரு வரையும் இரட்சிக்கவே முடியாது. பாருங் கள்? என்னால் அதைச் செய்ய முடியாது. எப்படியும் நான் அவர்களை இரட்சிக்கவே முடியாது. ஆனால், ‘பிதா எனக்குக் கொடுத்திருக்கிற யாவும் என்னிடத்தில் வரும்.’ எனவே நான் எங்கு போக வேண்டுமென்று அவர் என்னிடம் கூறா

விட்டால், என்னால் என்ன செய்ய முடியும்? பாருங்கள்?

எனவே, நான் செய்கிற காரியம் என்ன வென்றால், அதைக் குறித்துக் கவலைப் படுவதேயில்லை - சற்றும் கவலைப்படுவ தேயில்லை. அது எப்பொழுதும் இருந் ததைக் காட்டிலும் மோசமாகத்தான் இருக் கிறது. நான் அதைக் குறித்து சந்தோஷப் படுகிறேன். நான் அப்படியே-அப்படியே எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டு ஆயத்தமாயிருக்கிறேன், அது உங்களுக்குத் தெரியும். அது வரும்போது, கர்த்தாவே, இதோ இருக்கிறேன். நான் அப்படியே காத்துக் கொண்டிருக்கிறேன்.

77.இப்பொழுது இங்கு தான் அது சம்பவிக்கிறது. ஞாயிற்றுக் கிழமையில் அந்த விளக்கப்படத்தில் (chart) நீங்கள்

கண்டபடி, எடுத்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள்... இப்பொழுது, ஆதி பெந்தெகோஸ்தே சகோதரர்களுக்கோ - அல்லது அதற்குப் பிந்திய கால பெந்தெ கோஸ்தே சகோதரர்களுக்கோ, அங்கே அந்த முற்காலத்திய சபைகளில் போது மான அளவில் இடங்கள் நிரம்பவில்லை, நான் அதை நம்பமாட்டேன். ஆனால் நான் இவ்வாறு நம்புகிறேன், ஒவ்வொரு மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனும்... நாம் எவ்வாறு மறுபடியும் பிறக்கிறோம்? நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசு வாசித்து, ஏற்றுக்கொள்ளும் போது தான் மறுபடியும் பிறக்கிறோம், (பாருங்கள்?)...

இப்பொழுது, நீங்கள் விசுவாசிப்பதாக உங்கள் மனதில் சொல்லிக் கொள்ளும் காரணத்தினால் நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்று நான் நம்புவதில்லை. நீ உண்மை

யாகவே ஒரு கிறிஸ்தவனா இல்லையா என்று உன்னுடைய ஜீவியமே கூறும் என்று நான் விசுவாசிக்கிறேன். நான்-நீங்கள், 'என்ன...' என்று கூறலாம்.

78. இன்று, அங்கேயிருக்கும் அந்த சீமாட்டி ஏதோ வொன்றைக் குறித்தோ, அல்லது ஒரு-ஒரு கிறிஸ்தவளாக இருப்பதைக் குறித்த வேறு எதையோ, அல்லது மற்ற எதையோ பற்றிக் கூறினாள். அவள், 'எந்த ஸ்தாபனம்?' என்று கேட்டாள். பாருங்கள், எந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவன் என்பதை அவர்கள் துரிதமாக அறிய விரும்புகிறார்கள்.

79. நான், 'எந்த ஸ்தாபனத்தையும் சேர்ந்தவன் அல்ல, நான் வெறுமனே ஒரு கிறிஸ்தவன்' என்று கூறினேன், நீங்கள் பாருங்கள். ஒரு கிறிஸ்தவன் என்பது...

80. நீங்கள், ‘நல்லது, ஒரு கிறிஸ்தவன் என்பதற்கு ஒரு காம்பல்லைட் (Campbellite) என்று அர்த்தம்’ என்று கூறலாம்.

இல்லை, அது-அது... அவர்கள் வெறுமனே தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள், ஆனால் கிறிஸ்தவன் என்பதற்கு அது அர்த்தமல்ல. கிறிஸ்தவர்களாக இல்லாமல் கிறிஸ்தவ சபை என்று அழைத்துக் கொள்பவைகளைச் சேர்ந்திருக்கிற அநேக ஜனங்களை நினைத்துப் பார்க்கிறேன், அது எனக்குத் தெரியும். மேலும் கிறிஸ்தவர்கள் அல்லாத அநேக அங்கத்தினர்கள் அவர்களிடம் இருக்கிறார்கள் என்று கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் கிறிஸ்தவ சபைகளைக் குறித்து அதே காரியத்தையே உங்களிடம் கூற (முடியும்);

ஆனால் கிறிஸ்தவன் என்பது நீங்கள் சேர்ந்து கொள்ளும் ஒரு சபை அல்ல; அது நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் பிறந் திருக்கிறீர்கள் என்ற ஒரு அனுபவமாக உள்ளது.

81. இப்பொழுது, கவனியுங்கள், எடுத் துக் கொள்ளப்படுதல் உலகம் முழுவதும் நடக்கும், ஏனென்றால் அவர், 'இரண்டு பேர் வயலில் இருப்பார்கள், நான் ஒரு வனை எடுத்துக் கொள்வேன், மற்றவனைக் கைவிடுவேன். இரண்டு பேர் படுக்கையில் இருப்பார்கள்; நான் ஒருவனை எடுத்துக் கொண்டு, மற்றவனைக் கைவிடுவேன் (லூக்கா 17:34, 36)' என்று கூறினார். நீங் கள் பாருங்கள், இரண்டு பேர் படுக்கையில் இருக்கிற பூமியின் ஒரு பக்கம் இருட் டாயிருக்கும் நேரத்தில், இரண்டு பேர் வயலில் இருக்கும் போது, பூமியின்

மறுபக்கத்தில் அது அறுவடை நேரமாக இருக்கும். பாருங்கள்? அது ஒரு மகத்தான பெரிய எடுத்துக் கொள்ளப்படுதலாக நிகழும் என்பதை அது காட்டுகிறது; அது சரியாக உலகத்திலிருந்து வெளியே புறப் பட்டு செல்லும். பாருங்கள்? 'இரண்டு பேர் வயலில் இருப்பார்கள், நான் ஒருவனை எடுத்துக் கொள்வேன், மற்றவனைக் கைவிடுவேன். இரண்டு பேர் படுக்கையில் இருப்பார்கள், நான் ஒருவனை எடுத்துக் கொண்டு, மற்றவனைக் கைவிடுவேன் (லூக்கா 17:34, 36).'

82.இப்பொழுது, நாம்-நாம் பார்க்கி றோம்... அதன்பிறகு புஸ்தகத்தில் எழுதப் பட்டவர்களாக காணப்பட்ட யாவரும் அந்த உபத்திரவத்திற்கு முன்பாக அந் நாளில் விடுவிக்கப்பட்டார்கள். எனவே, உங்களுடைய பிள்ளைகளோ, உங்க

ளுடைய தாயாரோ, உங்களுடைய அன் பார்ந்தவர்களோ, அவர்கள் யாராயிருந் தாலும், அவர்களுடைய பெயர் ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப் பட்டிருக்குமானால், என்னுடைய விலை யேறப்பெற்ற பிள்ளைகளே, நீங்கள் சரி யாக அங்கேயிருப்பீர்கள்.

நாம் எங்கிருந்தாலும் காரியமில்லை, நான்... கடல்தாண்டி விமானத்தில் பறந்து, அந்த விமானம் வானத்திலேயே வெடித்து சிதறி, நான் - நீங்கள் இந்த என்னுடைய சரீரத்தில் ஒரு துண்டைக் கூட ஒருபோதும் கண்டுபிடிக்காமல் இருந்தாலும், அதற்கு இதனோடு எந்த ஒரு சம்பந்தமும் இல்லை. பாருங்கள்? நான் அங்கே அதேவித மாகவே இருப்பேன். நீங்கள் அதைக் குறித்து கவலைப்பட வேண்டாம். உங்கள் கரத்தைக் குலுக்கி, உங்களோடு கர்த்தரைத்

துதித்து, இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் அவருக்கு கிரீடம் சூடுவதற்கு நான் சரியாக அங்கே இருப்பேன்.

83. ஒருக்கால் பவுலுடைய சரீரத்தின் ஒரு சிறுதுகள் கூட மீதியாக இல்லாம லிருந்திருக்கும் என்று நினைக்கிறேன், அது இருப்பது கடினம் தான். ஆனால் அவனுடைய சரீரத்தை உண்டாக்கின மூலப்பொருட்கள் எல்லாமே எங்கோ ஓரிடத்தில் இருக்கிறது. எனவே, அவைகள் அந்நாளில் ஒன்றாக சேர்க்கப்படும்.

நீங்கள் மரிக்கும்போது, நீங்கள் உண்மையில் மரிப்பதில்லை. ஒரு கிறிஸ்தவனால் மரிக்க முடியாது. ஒரு கிறிஸ்தவனுக்கு மரணம் என்ற அப்படிப்

பட்ட ஒரு காரியமே கிடையாது, அது வேதாகமத்திலே கிடையாது.

லாசருவின் காரியத்தைப் போல... அவர் கூறினார்-அவர்கள் கூறினார்கள்... 'நம்முடைய-நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான் (யோவான் 11:11)' என்று இயேசு கூறி னார். பாருங்கள், அவன் மரித்து விட்டான் என்று அவர் ஒருபோதும் கூறவில்லை. 'அவன் நித்திரையடைந்திருக்கிறான்' என்று தான் கூறினார்.

84. அவர்கள், 'ஓ, நல்லது, அவன் நித்திரையாயிருந்தால், அவன் நன்றாகத் தான் இருக்கிறான் என்று நான்-நான் நினைக்கிறேன். அவன் நிச்சயமாக சும டைந்து கொண்டிருக்கிறான்' என்றார்கள்.

எனவே, அவர் அவர்களுடைய மொழி நடையில் பேச வேண்டியதாயிற்று.

85. அவர், 'இப்பொழுது, வேறு வழியில்... உங்களுடைய சொந்த பாஷையில் (கூறினால்) அவன் மரித்துப் போனான். அவன் அங்கே இராததினால் உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன். நான் அவனை எழுப்பப் போகிறேன்' என்றார். பாருங்கள்? ஓ, ஆமாம். பாருங்கள்? நித்திரை செய்தல். பாருங்கள், அவர் அப்பொழுதும் அவருடைய சொந்த... ஐக் கொண்டிருந்தார். புரிகிறதா? 'உங்கள் நிமித்தமாக-நீங்கள் அதை அறிந்து கொள்ளும் விதமாக, அவன் மரித்துப் போனான். ஆனால் எனக்கோ, அவன் நித்திரையடைந்திருக்கிறான், நான் - செய்யப் போவதில்லை. நான் அவனை உயிர்த்தெழும்படி செய்யப் போவதில்லை,

நான் அவனை வெறுமனே எழுப்பப் போகிறேன். பாருங்கள், நான் அவனை எழுப்பப் போகிறேன்' என்றார்.

86. எனவே, நீங்கள்-நீங்கள் இதைக் கவனியுங்கள் இயேசு தாமே மரித்த போதும்... பாருங்கள், சரீரம் மூன்று பாகங்களால் ஆனது. ஒரு ஆத்துமா... நாம் மூன்று பாகங்களாக இருக்கிறோம், நீங்கள் ஏழு சபைக் காலங்களில் கண்ட படி, அவை ஆத்துமா, சரீரம், ஆவி ஆகிய வையாகும்; நான் அதை வரைந்து வைத்திருந்தேன்: சரீரத்திற்கு ஐந்து உட் பிரவேசிக்கும் வாசல்கள் (entrances) இருக்கின்றன, அவை பார்த்தல், ருசித்தல், உணருதல், முகருதல், மற்றும் கேட்டல் ஆகியவையாகும், மேலும் மனசாட்சியும், இன்னும் மற்றவையும் தான் ஆத்துமாவுக் கானவை. அதன்பிறகு ஆவிக்கு அங்கே

ஒரு உட்பிரவேசிக்கும் வழி தான் உண்டு: அது உங்களுடைய சுயாதீன சொந்த சித்தமாகும் (free moral agency). அது ஒரு தீர்மானம் எடுப்பதாகும். நீங்கள் பாருங்கள்? நீங்கள் அதைப் புறக்கணிக்கலாம், அல்லது-அல்லது நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளலாம்.

எனவே இப்பொழுது, ஒரு நபர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, இரட்சிக்கப்படும்போது, உங்களுடைய வீட்டார் எல்லாருமே, உங்களுடைய முழு குடும்பமே, பூமியிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் இரட்சிக்கப்பட்டு விடும். இப்பொழுது...

அல்லது, அவர்கள் உள்ளே போவார்கள்.

87. இப்பொழுது, கிறிஸ்து மரித்த போது, அவர் சிலுவையை விட்டுப் போவதற்கு முன்பாக, தமது ஆவியை தேவனிடத்தில் ஒப்புவித்தார். அவர், ‘உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (லூக்கா 23:46)’ என்றார். அவருடைய ஆத்துமாவோ பாதாளத் திற்குப் போய், அவர் காவலில் இருந்த ஆவிகளுக்குப் பிரசங்கித்ததாக (அதுதான் அவருடைய மனசாட்சி, அவர் என்னவாக இருந்தாரோ அது...) வேதாகமம் கூறு கிறது, மற்றும் அவருடைய சரீரமோ கல்லறைக்குச் சென்றது.

இப்பொழுது பாருங்கள், அவர் வேதவாக்கியங்களின் தடைவேலிக்கு (barricade) பின்னால் இருந்தார். அவரால் மூன்று நாட்களாக உயிர்த்தெழ முடிய வில்லை. அவருடைய ஆவி இங்கே

தேவனுடைய சமூகத்திற்குத் திரும்பிச் சென்றது. இப்பொழுது, மூன்று நாட் களுக்குப் பிறகு, அந்த தடை அரண் (barricade) கீழே விழுந்தது, ஏனென்றால் வேதவாக்கியம் நிறைவேறியிருந்தது. அவ ருடைய ஆவியானது அந்த ஆத்துமா விடம் சென்றது, அந்த ஆத்துமாவோ சரீரத்திடம் சென்றது. அவர் உயிர்த்தெழுந் தார். அவர் மரிப்பதற்கு முன்பாக இவ்வாறு கூறினார், அவர், 'என்னுடைய ஜீவனைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு (யோவான் 10:17,18)' என்றார்.

88. இப்பொழுது, அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். நான் அறிந்துள்ள வரையில், இன்றிரவு இங்கேயுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்தவர்களாக இருக்

கிறீர்கள். இப்பொழுது, கவனியுங்கள். இப்பொழுது உங்களுக்குள் இருக்கிற அந்தக் காரியமானது, இப்பொழுது உங்களுக்குள் இருக்கிற அந்த ஆவி, அந்த அதே ஆவி தான் உங்களை உயிர்த்தெழவும் செய்யும். உங்களுடைய ஜீவனைக் கொடுக்க உங்களுக்கு அதிகாரம் உண்டு. நீங்கள் இப்பொழுதே கிறிஸ்துவுக்காக அதைக் கொடுக்கிறீர்கள். அதன் பிறகு அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் உண்டு. பாருங்கள்? அதைக் கொடுக்கவும், அதை எடுத்துக் கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் உண்டு.

அது உங்களை உயிர்த்தெழச் செய்கிற உங்களுக்குள் இருக்கிற அந்த அதே தேவனுடைய ஆவிதான். அந்த அதே தேவனுடைய ஆவி தான் கிறிஸ்துவை

உயிரோடெழுப்பும்படி அவருக்குள்ளும் இருந்தது. ஆகவே தான், அதைக் கொடுக்கவும் உங்களுக்கு அதிகாரம் உண்டு; அதை எடுத்துக் கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் உண்டு.

89. நீங்கள் மரிக்கும்போது, அல்லது - நீங்கள் - நம்முடைய அன்பார்ந்தவர்களோ அல்லது யாராவது நமக்கு முன்பாகவே போய் விடுவார்களானால், அவர்கள் மரிக்கவில்லை. அவர்களுடைய ஆவி தேவனோடு இருக்கிறது, அவர்களுடைய ஆத்துமாவோ தேவனுடைய பலிபீடத்தின் கீழ் இருக்கிறது, அவர்களுடைய சரீரமோ கல்லறைக்குள் இருக்கிறது, அது சரியாக எங்கேயிருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும்.

எனவே, என்ன சம்பவிக்கிறது? வேத வாக்கியங்கள் எல்லாம் நிறைவேறும் போது, அது வேதாகமத்தில் கூறப்பட்டது போல, - 'இந்த ஆத்துமாக்கள் பலிபீடத்தின் கீழிருந்து கொண்டு, 'எதுவரைக்கும் கர்த்தாவே, எதுவரைக்கும்?' என்று கதறிக் கொண்டிருக்கின்றன' என்று அது கூறுகிறது. அவர்கள் பூமிக்குத் திரும்பி வந்து, சரீரங்களில் இருக்க விரும்புகின்றனர். அவர், 'கிறிஸ்துவுக்கு சாட்சியாக நீங்கள் துன்பப்பட்டது போல, உங்கள் உடன் ஊழியக்காரரும் துன்பப்படுகிற வரையில் கொஞ்சகாலம் (இளைப்பாற வேண்டும்)' என்று கூறினார்.

அதன்பிறகு, நீங்கள் பாருங்கள், அந்த வேதவாக்கியம் நிறைவேறும் போது, அந்த ஆவிகள் அங்கே நேராக பலிபீடத்தின் கீழ் இறங்கி அந்த ஆத்துமாவை

மேலே எடுத்துக்கொள்ளும். அந்த ஆத்து மாவோ கீழே சென்று, அந்த சரீரத்தைக் கண்டுபிடித்து, (அங்கே தான் நீங்கள் இருக்கிறீர்கள்), அதை மீண்டும் உயிர்த் தெழச் செய்யும்.

90. அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். இன்றிரவு சரியாக இக்கட்டி டத்தில் இருக்கும் இந்த பரிசுத்த ஆவி, இங்கே என்னுடைய இருதயத்திற்குள் இருக்கிற இந்த பரிசுத்த ஆவி தான் கடைசி நாளில் என்னை உயிரோடெழுப்பும்.

இப்பொழுது எனக்குள் இருக்கிற இந்த பரிசுத்த ஆவி தான் நான் ஒரு அழி யாமையுடைய வாலிப சரீரத்தைக் கொண் டவனாய் இருப்பதைக் காணும், அது ஒருபோதும்... (அழிந்து) போகாது. உங்க ளுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவி தான்

நரைத்த தலைமுடிகள் மங்கி மறைந்து போவதைக் காணும், மேலும் அது என்ன வாயிருந்தாலும் அதைக் காணும். வயது முதிர்ந்த நீங்கள், மிகவும் வயது முதிர்ந் தவர்களாயிருந்து, மீசையைக் கொண்ட வர்களாய், இவ்விதமாக நடந்து கொண் டிருந்தாலும், அது ஒரு துளி வித்தியா சத்தையும் ஏற்படுத்துவதில்லை. அந்த அதே பரிசுத்த ஆவியானவர் அந்நாளில் சடுதியாக, உங்களை மறுபடியும் ஒரு வாலிபனாகவோ, வாலிப பெண்ணாகவோ மாற்றி விடுவார். அது வேதாகமமாக இருக்கிறது. அது உண்மை. அது இப் பொழுது நமக்குள் இருக்கிற அந்த ஆவி தான். அது சரியாக இப்பொழுதே நமக்குள் இருக்கிறது. இனி வரப்போகிற ஒன்று அல்ல, இப்பொழுது நமக்குள்ளிருக்கிற ஒன்று. இப்பொழுது அது உங்களுக்குள்

இருக்கிற தேவனாகும், அவர் உயிரோ டெழுப்புவார்...

91. நீங்களாகவே மேலே எழும்பிச் செல்ல முடியும். இப்பொழுதே உங்களால் ஏன் அதைச் செய்ய முடியவில்லை? காரணம் என்னவென்றால் பாருங்கள், அங்கே வேதவாக்கியம் தான் உங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது; நீங்கள் எடுத்துக்கொள்ளப்படுதல் வரைக்கும் காத்திருக்க வேண்டியுள்ளது.

பாருங்கள், அங்கே தான் உங்கள் காரியம் இருக்கிறது. நீங்கள் சரியாக அங்கேயே தரித்திருக்க வேண்டும். புரி கிறதா? இவ்வளவு உயரத்திற்கு (எழும்பி) வருவதற்கு உங்களுக்கு அனுமதியில்லை. அது அவ்வாறு இருக்குமானால், ஏன், நாம் -- நாம் நமக்கு சொந்தமான ஒரு சிறிய

உலகத்தை நமக்கென்று சிருஷ்டித்திருப் போம் என்று நான் கூறினேன். அப் பொழுது நீங்கள் ஒரு உலகத்தில் ஜீவித்து, நானோ வேறொரு உலகத்தில் ஜீவித்திருப் பேன், அப்படியானால் அங்கே கர்த்த ராகிய இயேசுவின் வருகையே இருக் காதே. அது என்னவாக இருக்கும்? புரி கிறதா?

ஆனால் அதைச் செய்ய உங்களுக்கு வல்லமை உண்டு. வெறுமனே தேவ னுடைய மிக மிகச்சிறிய நிழலும் எதையும் செய்ய முடியும். ஏனென்றால், பாருங்கள், அவர்-அவர் சர்வ வல்லமை உடையவர். சர்வ வல்லமை என்பது என்னவென்று உங்களுக்குத் தெரியும்... அவர் முடிவற்ற வராயிருக்கிறார். முடிவற்றவர், முடிவற்ற வர் என்பதும் சர்வ வல்லமை படைத்தவர்

என்பதும். அதுதான் முடிவற்றவர் என்பது; அங்கே...

இல்லாதவர். நல்லது, உங்களால்-உங்களால்-உங்களால் அதை விளக்கிக் கூறவே முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். முடிவில்லாத என்பது அப் படியே ஒரு கேமராவின் மேல் இருப் பதைப் போல, முடிவற்றது.- அது அப் படியே அங்கேயிருந்து தான் வருகிறது.

92. அதன்பிறகு, சர்வ வல்லமையுள்ள என்பது சகல வல்லமையும் கொண்ட என்பதாகும். போகும் இடமெல்லாம் அவர் இருக்கிறார்... அந்த இரவில், அப்பெரிய கண்ணாடி வழியாக பார்க்கும் படியாக என்னைப் பார்க்க வைக்கும் படியாக, அந்த வானியல் ஆய்வாளர் என்னை மேலே அழைத்துச் சென்ற போது,

நான் இங்கே வெளியே நின்று கொண்டு, ஒரு கண்ணாடி வழியாக நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தேன், அப்போது 120 மில்லியன் ஒளி ஆண்டுகள் தூரத் தையும் என்னால் காண முடிந்தது. 120 மில்லியன் ஒளி ஆண்டுகள் தூரத்தையும் காண முடிந்தது... நல்லது, நீங்கள் இப் பொழுது காணும் வியாழன் கோளைக் குறித்தும், செவ்வாய் கிரகத்தைக் குறித்தும், இந்த நட்சத்திரங்களைக் குறித்தும் பேசுகி றீர்களே, நல்லது, என்னே, நூற்றி... க் குறித்து எண்ணிப் பாருங்கள். ஒளியானது ஏறக்குறைய...பயணம் செய்கிறது. அது என்ன? எண்பத்து... அது வினாடிக்கு 1,86,000 மைல்கள் பயணம் செய்கிறது. வினாடிக்கு ஒரு இலட்சத்து எண்பத் தாறாயிரம் மைல்கள். அது ஒரு 120 மில்லியன் ஆண்டுகளை எடுத்துக் கொள்

கிறது. வியூ. வினாடிக்கு 1,86,000 - அதை 120 மில்லியன் ஆண்டுகளுக்கு வகுத்துப் பாருங்கள். அப்படியானால் உங்களுக்கு என்ன கிடைக்கிறது? அதுதான் மைல்கள். ஓ, என்னே, அது அப்படியே நம்மை நீங்கள்-நீங்கள்... போன்று உணரச் செய்கிறது. பாருங்கள்?

ஆனால் இப்பொழுது, அப்படியானால் அதற்கும் அப்பால், அங்கே அநேக சந்திர னும், நட்சத்திரங்களும் உள்ளனவே... அவருடைய சொந்த வார்த்தையின் வல்ல மையைக் கொண்டு அவர் அவைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

93. அந்த அதே காரியம் தான் ஒரு கிறிஸ்தவனான உங்களுக்குள்ளும் இருக் கிற அவைகளைக் கட்டுப்பாட்டில் வைத் திருக்கிறது. ஓ, என்னே. பாருங்கள்,

பாருங்கள், அங்கே தான் உங்கள் காரியம் இருக்கிறது. எனவே அங்கே - அது வாகத்தான் நீங்கள் இருக்கிறீர்கள்.

பாருங்கள், ஜனங்கள், 'நல்லது, நான் ஒரு கிறிஸ்தவன். நான் விடாப்பிடியாக தொடர்ந்து முயற்சி செய்ய (dogged around) வேண்டும் என்று நினைக்கிறேன்' என்று நினைக்க முயலுகிறார்கள். இல்லை, நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டாம். சகோதரனே, நீ ஒரு கிறிஸ்தவனா யிருக்கிறாய். அது உன்னதமான... நீ ஒரு தேவனுடைய குமாரனாயிருக்கிறாய். நம்முடைய பிதா இராஜாவாயிருக்கிறார். நிச்சயமாக. ஆமென். நம்முடைய பிதா வானவர் இராஜாவாக இருக்கிறார், நாமோ-நாமோ அவருடைய குமாரர்கள். நாம் ஒரு இராஜாவுக்கு இராஜ குமாரர்

களும் (இளவரசர்களும்), இராஜ குமாரத்திகளுமாய் (இளவரசிகளுமாய்) இருக்கிறோம், (ஆமென்). பாருங்கள்? அங்கே எவ்வளவு மிக உயர்ந்த நிலை இருக்க முடியுமோ, அவ்வளவு மிக உயர்ந்த நிலையில் இருக்கிறோம். நமது தேவனுடைய அதே ஆவி தான் நமக்குள்ளே இருக்கிறது. அதுதான் காரியம்.

எனவே, இங்கே சம்பவிக்கிற காரியங்களைக் குறித்து நாம் ஏன் கவலைப் படுகிறோம்? பாருங்கள், அங்கே உள்ள அந்த இடத்தை தான் கவனத்தில் கொள்ள வேண்டும். இது வெறுமனே ஒரு சோதனை காலம் தான். பிதாவானவர் இதை முடிக்கும் போது, நாம் போய் விடுவோம். நாம் வீட்டிற்குப் போவோம்.

பாருங்கள்? எனவே, அது என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணும்?

94. எனவே, பிறகு, அக்காரணத்தினால், உங்களுடைய பிள்ளைகள் இரட்சிக்கப்படாமலிருந்தால், அவர்கள் இரட்சிக்கப்படுவது வரையில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள். (இப்பொழுது, பரிசுத்த யோவான் 5:24ல்), இயேசு, 'என் வசனங்களைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் நியாயத் தீர்ப்புக்கு உட்படுவதில்லை' என்று கூறியுள்ளதை ஞாபகம் கொள்ளுங்கள்.

அப்படியானால், அவன் நியாயத்தீர்ப்புக்கு உட்படாமலிருந்தால், அவன் எங்கே போகிறான்? அவன் எடுத்துக் கொள்ளப்

படுதலில் போகிறான். பாருங்கள்? காரணம் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குப் பிறகுதான் நியாயத்தீர்ப்பு இருக்கிறது. பாருங்கள்? ‘அவன் நியாயத்தீர்ப்புக்கு உட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்.’ ஏனென்றால் அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிறான். அது அற்புதம் அல்லவா? ஆகையால் அவர்கள் - உங்களுடைய பிள்ளைகள் அங்கே உங்களுடனே கூட இருப்பார்கள். உங்களுடைய அன்பார்ந்தவர்களும் அங்கே உங்களுடனே இருப்பார்கள். நானும் அங்கே உங்களோடு இருப்பேன் என்று நம்புகிறேன். ஆமென்.



# நீயும் உன் வீட்டாரும்




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து